**SC No.** 232/2023 PW9 23.01.2026

திரு.கார்த்திகேயன் த/பெ. சண்முகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் 18.09.2021-ம் தேதி மதியம் 2.00 மணியளவில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் எந்த இடத்தில் பெறப்பட்டது என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் பெற்றதாக கூறியுள்ளார். பார்த்தசாரதி எத்தனை மணிக்கு வாக்குமூலம் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் பார்த்தசாரதியிடம் நான் வாக்குமூலம் பெறவில்லை, விவரங்களை கேட்டு விசாரணை மட்டும் செய்தேன். நான் விவரங்களை கேட்டபோது உதவி ஆய்வாளர் பார்த்தசாரதியிடம் விசாரணை செய்தபோது எத்தனை மணிக்கு வாக்குமூலம் பெற்றதாக தெரிந்து கொண்டேன் என்றால் 9.00 மணிக்கு தகவல் கிடைத்து சென்றதாகவும், அவர் சிகிச்சையில் இருந்ததின் காரணமாக அவரை சந்திக்க இயலாததால் 18.09.2021 ம் தேதி வாக்குமூலம் பெற்றதாக நான் தெரிந்து கொண்டேன். அ.சா.1 ராஜ்குமாரை AVR மருத்துவமனையில் வைத்து நான் விசாரணை செய்தேன். அவர் எனது விசாரணையில் அஜீத்தும் ஜெயக்குமார் மருமகன் அய்யப்பனும் TVS ஸ்போர்ட்ஸ் பைக்கில் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் இருச்சக்கர வாகனம் என்று சொல்லியுள்ளார், வாகனத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ராஜ்குமாருக்கு பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் குற்ற எண்.7/2012 என்ற எண்ணில் கொலை வழக்கு பதிவாகி உள்ளது என்றால் சரிதான்.

ராஜ்குமார் மீது குற்ற எண் 10/2020 என்ற NDPS வழக்கு உள்ளது என்றால் சரிதான். பட்டீஸ்வரம் காவல் நிலைய குற்ற எண்.222/2018 என்ற வழக்கும் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் சரிதான். பட்டீஸ்வரம் காவல் நிலைய குற்ற எண்.223/2013 என்ற வழக்கும் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் சரிதான். கும்பகோணம் கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.358/2015 என்ற வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 ராஜ்குமார் மீது பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் சரித்திர பதிவேட்டு குற்றவாளியாக உள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 ராஜ்குமார் மீது பல்வேறு வழக்குகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் இரண்டு இடங்கள் என்றால் வெட்டு பட்டது ஒரே இடம் தான்.

2) அ.சா.1 சம்பவம் நடந்ததாக சொல்வது எதிரியின் வீட்டின் முன்பு என்றால் சரிதான். அ.சா.1ன் வீடும் எதிரியின் வீடும் வெவ்வேறு தெருவும் என்றால் சரிதான், ஒரே தெருதான் வடக்கு தெருவில் காலனி வீடுகள் உள்ளதால் காலனி தெரு என்று குறிப்பிடுவார்கள். தேனாம்படுகையில் மொத்தம் 2 தெருக்கள் தான் உள்ளது. ஒரு தெரு என்பது வடக்கு தெரு, மற்றொரு தெரு என்பது காலனி தெரு ஆகும். அ.சா.1 எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும் அப்போது தான் பிரச்சனை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரியின் வீடு உள்ள காலனி தெரு என்பது சிமெண்ட் சாலை உள்ள தெரு என்றால் மணல் பரப்பும் உள்ளது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சாலை முழுவதும் சிமெண்ட் சாலை தான் என்றாலும் அதில் மண் பகுதி இல்லை

என்றாலும் சரியல்ல. வரைபடத்தில் ராஜ்குமாரின் காலனி வீடு என்பது காலனி வீடு என்றால் சரிதான். அ.சா.1 ராஜ்குமாரின் வீடு இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வரைபடத்தில் எதிரியின் வீட்டின் பின்புறத்தில் மழை நீர்வடிகால் என்று குறிப்பிட்டு எதுவும் இல்லை என்றால் சரிதான். ஜெய்குமார் என்பவரின் வீட்டிற்கு நேர் எதிர்புறத்தில் இடது புறத்தில் வெண்ணிலா என்பவரின் வீடு இருப்பதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்தின்போது அய்யப்பன் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது புகார் வாக்குமூலம் 18.01.2021 அன்று 2.00 மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றதாக உள்ளது என்றால் அது தனி வழக்கு ஆகும்.

3) 3 வது எதிரி அய்யப்பனிடம் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் 1வது எதிரி அஜீத் மற்றும் 2வது எதிரி ஜெயக்குமார் ஆகியோர்களும் MS 6 வது வார்டில் உள்நோயாளியாக உள்ளதாகத்தான் வழக்கு பதிவாகியுள்ளது என்றால் அது உதவி ஆய்வாளர் விசாரித்த வழக்கு என்பதால் அதுப்பற்றி உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். பார்த்தசாரதி மற்றும் கோவிந்தராஜ் ஆகிய இருவரும் விசாரித்துள்ளார்கள். 3 வது எதிரி அய்யப்பன் 1வது எதிரியின் மீது கொடுத்த புகார் வாக்குமூலத்தில் பட்டீஸ்வரம் காவல் நிலைய குற்ற எண்.547/2021 சட்டப்பிரிவு 294(B), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் முதல் எதிரியின் மீது விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் இறுதி அறிக்கை தாக்கல்

செய்வதற்காக அரசு வழக்கறிஞரிடம் அனுமதி பெற்று அறிக்கை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறுதி அறிக்கைக்கு முன்பாக நான் பணி மாறுதலில் சென்று விட்டேன். அ.சா.1 எனது விசாரணையில் என் சகோதரர் சசிக்குமார், என் மாமன் மகன் ஜெய்சிங் ஆம்புலன்சில் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரத்தை கூறியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். மேற்படி விவரத்தை புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது, உதவி ஆய்வாளரிடம் தான் கேட்கவேண்டும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சசிக்குமார் அன்னை கல்லூரியில் தங்கியிருந்தார் என்றால் அவ்வாறு இல்லை, சம்பவ இடத்தில் தான் இருந்தார். ஜெய்சிங்-ன் சொந்த ஊர் சம்பவ இடத்திலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ள சுவாமிமலை கிராமம் என்றால் சரிதான், ஆனால் அவர் புதியதாக திருமணம் ஆன தனது மைத்துனரை விருந்திற்கு அழைப்பதற்காக தேனாம்படுகை வந்திருந்தார். சசிக்குமார், ஜெய்சிங் இருவருமே சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அவர்கள் இருவருமே வெளியூரில் இருந்தார்கள் என்றாலும், அந்த உண்மையை தெரிந்து கொண்டு மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனது விசாரணையில் கோமதி, முருகன், சிலம்பரசன், கலியபெருமாள், துரைமாணிக்கம், அஞ்சம்மாள், கோவிந்தசாமி, நாகேஷ் ஆகியோர் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அய்யப்பன், கோமதி, பாண்டியன், முருகானந்தம், துரைமாணிக்கம் ஆகியோர்

யாரையும் சாட்சியாக விசாரணை செய்துள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை, வீடு பூட்டியிருந்ததால் விசாரிக்க இயலவில்லை. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு சாட்சியையும் விசாரிக்காமல் இருந்து விட்டு தற்போது அவர்கள் வீடு பூட்டியிருந்தது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது விசாரணையில் 19.09.2021 அன்று தான் அ.சா.1 சுய நினைவிற்கு வந்தார் என்ற விவரத்தை சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அவ்வாறு வாக்குமூலத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதிலிருந்து எதுவும் பேச முடியாத நிலையில் தான் 2 நாட்கள் இருந்தேன் என்ற விவரத்தை எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் சொன்ன தேதியில் அ.சா.1 டம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றாலும், வாக்குமூலம் பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டு நேரம் என்றால் சரிதான், போதுமான தெருவிளக்கு வெளிச்சம் இருந்தது. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வெளிச்சம் கிடைக்கும் அளவிற்கு எந்த விளக்கும் இல்லை என்றால் சரியல்ல, 2 தெருவிளக்குகள் இருந்தது. அ.சா.2 சசிக்குமார் எனது விசாரணையில் 17.09.2021 அன்று இரவு 9.30 மணிக்கு என் கடைக்கு வீட்டிற்கு சாமான் வாங்குவதற்காக சென்றார் அப்போது என் அண்ணன் கடையில் இருந்தபோது 1வது மற்றும் 3 வது எதிரிகள் பைக்கை முறுக்கியதாக வாக்குமூலம் கொடுத்துள்ளாரா என்றால் 9.30 மணி என்று என்னிடம் சொல்லவில்லை சுமார் 8.30

மணி என்று என்னிடம் சொல்லியுள்ளார். அ.சா.1 ஐ மருத்துவமனையில் யார் சேர்த்தார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், சசிக்குமாரும், ஜெய்சிங்கும் மருத்துவமனையில் சேர்த்தார்கள். விபத்து பதிவேட்டினை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

5) விபத்து பதிவேட்டில் ராஜ்குமாரை மருத்துவமனையில் சேர்த்தது ராம்குமார் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் சசிக்குமாரோ, ஜெய்சிங்கோ அ.சா.1 ராஜ்குமாரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றாலும், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ராம்குமாரை சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. அ.சா.1 ராஜ்குமார் AVR மருத்துவமனையில் மொத்தம் 5 நாட்கள் மட்டும் தான் இருந்தார் என்று எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவந்தது, பொருளாதார காரணத்தினால் மருத்துவமனையில் வைத்து பார்க்காமல் வீட்டிலிருந்து கொண்டு சிகிச்சை எடுத்துக் கொண்டார். எனது விசாரணையில் " ராஜ்குமார் என்னால் சாப்பிட கூட முடியாது என் அம்மா தான் சாப்பாடு ஊட்டி விடுவார் " என்ற விவரத்தை கூறியுள்ளாரா என்றால் என்னிடம் கூறவில்லை. அ.சா.3 ஜெய்சிங் எனது விசாரணையில் அ.சா.1 ன் உறவினர் என்றால் சரிதான்.

6) அ.சா.3 ஜெய்சிங் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், அவர் அ.சா.1 ன் உறவினர் என்பதால் சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சம்பவ இட சாட்சியாக ஒரு

நபரை கூட நான் விசாரிக்கவில்லை என்றாலும், இவ்வழக்கில் சாட்சிகள் அனைத்தும் அ.சா.3 ன் உறவினர்கள் என்றாலும் பின் யோசனையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் அஜீத், அய்யப்பன், ஜெயக்குமார் மூவரும் மருத்துவமனையில் இருந்த நிலையில் மருத்துவமனைக்கு வந்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டு கைது செய்த இடம் தவறாக இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சான்று பொருட்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சான்று பொருட்களுக்கும் இந்த எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எத்தனை படிவம் 91 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் 2 படிவம் 91 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு படிவம் 91-ம் 27.09.2021 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், கொரோனா காலகட்டம் என்பதால் அவ்வாறு அனுப்பப்பட்டுள்ளது. 27.09.2021 அனுப்பப்பட்டுள்ள படிவம் 91 வழக்கின் தடயப்பொருட்களுடன் அனுப்பப்படாததால் திருப்பப்பட்டு மீண்டும் 27.10.2021 அன்று தான் தடயப்பொருளுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றாலும், அவ்வாறு தான் குற்றவியல் நடுவர் குறிப்பு செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர், ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் மற்றும் அனைத்து ஆவணங்களும் வழக்கிற்கு ஏற்றார்போல் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) சா.பொ.5 மற்றும் சா.பொ.6 சம்பவ இடத்தில் கைப்பற்றவில்லை என்றாலும், அந்த இடத்தில் மண் பகுதியே இல்லை என்றாலும், பிற்பாடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் 19.09.2021 அன்று 14.30 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததற்கான குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொல்வது போல் எந்த சாட்சிகளிடமும் சொன்ன விதத்தில் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*